**கிண்ணியா நகர சபை - 2023**

--------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிண்ணியா நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட

மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 3,846,400 நிதிக்கூற்றுக்களில் ரூபா 32,173,680 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான தொகையினை வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 7,742,969 பெறுமதியான சபை அலுவலகம் மற்றும் பொது நூலக கட்டிடங்களின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காணி கட்டிடக் கணக்கின் கீழ் முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தற்போது இவ்வாறான தவறுகள் சீர் செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட புனர்நிர்மாண வேலை ஒன்றிற்க்காக செலுத்த வேண்டிய ரூபா 3,629,064 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | பெறப்பட்ட குத்தகை ரூபா 3,181,924 நிலுவைத் தொகையிலிருந்து கழித்து காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தற்போது இவ்வாறான தவறுகள் சீர் செய்யப்படும். | சரியான தொகையினை நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் அன்பளிப்புச் 08 வகையான தளபாட பொருத்துக்கள் மற்றும் புத்தகங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 627,214 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கில் சாட்டுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் ஆதனவரி அறவீடுகளின் போது சபையினால் மேலதிகமாக அறவீடு செய்யப்பட்ட ரூபா 70,291 தொகையான ஆதனவரி நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சீர் செய்யப்பட்டு தவறுகள் திருத்தப்படும். | உரிய தொகையினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 153,662,447 தொகையான 05 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களினால் சுட்டிக்காட்டப் பட்டுள்ள ஆவணங்களை தங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆவணச் சான்றுகள் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட 83 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கையினை துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவினம் ரூபா 6,620,366 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவினம் ரூபா 11,674,683 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,761,000 | 12,606,000 | 2,992,000 | 9,614,000 | 4,911,000 | 10,205,000 | 2,510,000 | 7,695,000 |
| (ii) | வாடகை | 20,000,000 | 69,604,000 | 4,593,000 | 65,011,000 | 20,345,000 | 48,974,000 | 3,063,000 | 45,911,000 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 5,245,000 | 3,079,000 | 3,079,000 | -- | 1,675,000 | 1,675,000 | 1,675,000 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 7,113,000 | 16,760,000 | 2,331,000 | 14,429,000 | 4,200,000 | 10,676,000 | 1,029,000 | 9,647,000 |
| | கூட்டுத் தொகை | 40,119,000 | 102,049,000 | 12,995,000 | 89,054,000 | 31,131,000 | 71,530,000 | 8,277,000 | 63,253,000 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி கணக்கின் மீதி ரூபா 9,614,000 காணப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்பட வில்லை | நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய குத்தகை வாடகை கூட்டுமொத்தம் ரூபா 27,267,000 தொகையினை அறவீடு செய்யவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்ய மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரகாரம், உரிய காலப்பகுதிக்குள் செலுத்த தவறியமையினால் தண்டப் பணமாக ரூபா 32,497 தொகை அந் நிதியத்திற்க்கு மேலதிகமாக சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரகாரம் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகைப் பெறுமதியிலிருந்து 40 சதவீத கழிப்பனவான ரூபா 244,400 தொகையினை உள்ளூராட்சி ஆணையாளரின் சிபாரிசு மற்றும் ஆளுனரின் அனுமதியின்றி சபையினால் கழிப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படாது தவிர்க்கப்படும் | உரிய சுற்றறிக்கைக் கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்த வாகன அனுமதிப்பத்திரங்கள் காலதாமதமாக பெறப்பட்டமையினால் சபைக்கு ரூபா 48,520 தொகையான இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் தவிர்க்கப்படும் | வாகன அனுமதிப்பத்திரங்கள் காலதாமதமின்றி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 89 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கான இணக்கச் சான்றிதழ் சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபையின் நகர அதிகார எல்லையினுள் வீதியினூடாக மணலினை கொண்டு செல்லும் வாகனத்திற்குகான கட்டணங்களினை அறவிடுவதற்க்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் | வீதிப் பாவனை வாகனங்களில் கட்டணங்கள் அறவிடும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட குளிரூட்டி அறையினை அக் குறிப்பிட்ட நோக்கத்திற்க்கு பயன்படுத்தி வருமானம் உழைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் | குறிப்பிட்ட நோக்கத்தினை பயன்படுத்தி வருமானம் உழைக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | கொள்வனவு செய்யப்பட்ட கொம்பொஸ்ட் கிறசர் இயந்திரத்தினை சேதனப் பசளை உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமானம் உழைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்படும் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தகர்கள் நியமிக்கப்படால் காணப்பட்டிருந்தன. | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட நியமனங்கள் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் பட்சத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் பிரமாணங்களுக்கு இணங்க 08 நிறுவனங்கள் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |